**O.S.No.52/2021**

பி.வா.சா2., திருமதி. செல்லம்மாள்
நாள் : 07.03.2026 நேரம் : 11.AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

தாவா வழக்கில் வாதி பிரதிவாதி யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மங்களம் கண்ணன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு எதற்ககாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததா என்றால் இல்லை. தாவா வழக்கில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளதா என்றால் உள்ளது. தாவா வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை மங்களத்திற்கு கிரையம் கொடுத்துள்ளேன். எனது கணவர் நிலஅளவையராக இருந்தார் என்றால் சரிதான். நான் சத்துணவு அமைப்பாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் பணி ஓய்வு பெறும் போது எந்த கிராமத்தில் நில அளவையராக இருந்தால் என்றால் மகிண்டி கிராமத்தில் பணிபுரிந்தார்.

2 .தாவா சொத்து மகிண்டி கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டு அவர் பெயரில் பட்டா இருந்தது. எனது மாமனார் பெயரில் இருந்த பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் பெயரில் பட்டா இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனறாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றாலும எனது கணவர் நிலஅளவையராக பணிபுரிந்ததால் அவர் மோசடியாக வருவாய் ஆவணங்கள் எனது பெயரில் மாற்றியுள்ளார் என்றாலும் சரியல்ல. எனது மாமனார் பெயரில் உள்ள சொத்து எனது கணவருக்கு பாத்தியப்படாமல் எவ்வாறு எனது பெயருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் எனது கணவருக்கு தான் முதலில் பாத்தியப்பட்டது அதன்

பிறகு தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது. நான் சொன்ன சங்கதியின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 1/2 செண்ட் ஆகும். தாவா சொத்துக்கு எனது பெயரில் பட்டா ஏற்பட்டதும் சொத்தை சுற்றி கல் ஊன்றினேனா என்றால் ஊன்றினேன். தாவா சொத்தை நான் எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் தினமும் பார்ப்பேன். தாவா சொத்தை நான் கடைசியாக பார்வையிடும் போது மேற்படி ஊன்றிய கல் உள்ளதா என்றால் எனக்கு சரியாக தெரியாது. நான் கிரையம் கொடுத்த இடத்திற்கு முன்பு தார் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது தாவா சொத்திற்கும் கிழக்கே தான் உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கே போகும் ரோடு எதில் சென்றடையும் என்றால் எனக்கு தெரியாது. தெற்கு பக்கம் போனால் ஊரணி வடக்கு பக்கம் மகிண்டி கிராமத்திற்கு செல்கிறது. மேற்படி ரோட்டில் போக்குவரத்து வசதி உள்ளதா என்றால் உள்ளது.

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.16 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.03.07 15:17:33 +0530